// இரண்டாம் பிரதி //

**திண்டுக்கல் மண்டல வனப்பாதுகாவலரின் செயல்முறை ஆணைகள்**

**பிறப்பிப்பவர் : திருமதி.சி.ஹ. பத்மா, இ.வ.ப.,**
**வனப்பாதுகாவலர்**

ந.க.ஆ. எண். 4770 / 2021 / ப1 நாள். 5 .01.2023

பொருள்: பணி - தமிழ்நாடு அமைச்சுப்பணி - கருணை அடிப்படையில் பணி நியமனம் - காலஞ்சென்ற திரு.ம.பன்னீர்செல்வம், அலுவலக உதவியாளரின் மகள் திருமதி.ப.மதிபிரியா என்பவருக்கு கருணை அடிப்படையில், தற்காலிக இளநிலை உதவியாளர் பணி நியமனம் வழங்கப்பட்டது - பணியை வரன்முறை செய்து ஆணை வெளியிடுவது - தொடர்பாக.

பார்வை :
1) முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வ.து.த.), சென்னை ந.க.எண். ண2/18995/2015, நாள். 04.07.2019.
2) மாவட்ட வன அலுவலர்,கரூர் செ.மு.ஆ.எண். ப1/2109/2019, நாள் 30.07.2019.
3) அரசாணை (நிலை) எண். 48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள். 26.02.2021.
4) தலைமை வனப்பாதுகாவலர், திண்டுக்கல் மண்டலம் ந.க.எண்.4770/2021/ப1 நாள் 13.07.2021.
5) முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், சென்னை ந.க.எண்.ண2/28318/2021, நாள். 23.08.2021.
6) மாவட்ட வன அலுவலர்,கரூர் ந.க.எண். ப1/2109/2019, நாள் 12.09.2022.

------

**ஆணை:**

திண்டுக்கல் வன மண்டலம், கரூர் வனக்கோட்டத்தில் அலுவலக உதவியாளராக பணியாற்றி வந்த பொழுது, 15.05.2002 அன்று திரு.ம. பன்னீர்செல்வம், அலுவலக உதவியாளர் பணியிடை மரணமடைந்ததால் அவரது மகள் திருமதி.ப.மதிபிரியா வனத்துறையில் கருணை அடிப்படையில் பார்வை 1 மற்றும் 2 இல் கண்ட கடிதங்களின்படி, இளநிலை உதவியாளராக 31.07.2019 முற்பகல் முதல் தற்காலிகமாக நியமிக்கப்பட்டார். இந்நிலையில், மேற்படி இளநிலை உதவியாளரின் பணியினை வரன்முறை செய்து தருமாறு, பார்வை 6 இல் கண்ட கடிதம் வாயிலாக கரூர் கோட்ட மாவட்ட வன அலுவலர் கருத்துரு சமர்ப்பித்துள்ளார்.

அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை நாள்.26.02.2021ல் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பத்தி-5 (1) 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எந்த வித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத

அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்ப

வரன்முறைபடுத்தப்படும்.

பத்தி - 5(2) மேலே பத்தி 5.1ல் உள்ள ஆணையினை செயல்படுத்

சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing authority) ஒரு நிலை கூடுத

அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (one level higher than the appointing authority

அவரவர் கட்டுபாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அ

பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்திட, உரிய செயல்முறை ஆணை

(Proceedings) வெளியிட்டு தொடர்புடைய அரசு பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதி

செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அரசாணை எண், 32, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (வனம்-2)துறை, நா

08.03.2019ன்படி மாவட்ட வன அலுவலர் அலுவலகங்களில் பணிபுரியும் இளநி

உதவியாளர் பதவிகளுக்கு மாவட்ட வன அலுவலரே நியமன அலுவலராக (Appointing

Authority) நியமித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

திருமதி.ப.மதிபிரியா, இளநிலை உதவியாளருக்கு மேற்கா

அரசாணைகளின்படி, நியமன அலுவலர் மாவட்ட வன அலுவலர் ஆவார். ஒரு நிலை

கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர் (One level higher than the appointing

authority) மண்டல அலுவலரான வனப்பாதுகாவலர் ஆவார்.

இளநிலை உதவியாளர் பதவியானது தமிழ்நாடு அரசுப்பணியாளர்

தேர்வாணயத்தால் (TNPSC) தேர்வு செய்யப்பட வேண்டும். அரசாணை எண்

தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நாள், 01.08.2018ல் பத்தி -5ல் பின்வருமாறு

தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. After careful examination, considering the ultimate benefit of the employee the views of the commission and as a simplification and proactive measure, the Government hereby directs to dispense with the procedure of obtaining the concurrence of the Tamil Nadu Public Service Commission for regularizing the services of the individuals appointed under Compassionate Grounds.

மேற்படி, அரசாணையில் கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் பணியிடங்களுக்கு வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தில் TNPSC (Concurrence) ஒப்புதல் பெற தேவையில்லை எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், பார்வை 5 இல் கண்ட முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் கடிதத்தில், அரசாணை (நிலை) எண். 48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள். 26.02.2021 இல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, விதித்தளர்வு எழாதபட்சத்தில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்களின் பணியினை வரன்முறை செய்து அறிக்கை செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அரசாணை (நிலை) எண். 48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள். 26.02.2021 ஐ செயல்படுத்தும் விதமாக, 02.02.2016 முதல் 31.12.2019 வரையிலான காலத்திற்குள், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணியமர்த்தப்பட்ட திருமதி.ப.மதிபிரியா என்பவரது பணியினை வரன்முறைப்படுத்த மாவட்ட வன அலுவலர், கரூர் சமர்ப்பித்துள்ள கருத்துரு மற்றும் பரிந்துரையினை ஏற்று, திருமதி.ப.மதிபிரியா, இளநிலை உதவியாளருக்கு கருணை அடிப்படையில் வழங்கப்பட்ட தற்காலிகப் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 31.07.2019 முற்பகல் முதல் முன்தேதியிட்டு வரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

5/1/23

வனப்பாதுகாவலர்,
திண்டுக்கல் மண்டலம், திண்டுக்கல்

5.1.23

பெறுநர்:
திருமதி.ப. மதிபிரியா, இளநிலை உதவியாளர்
(மாவட்ட வன அலுவலர், கரூர் மூலமாக)

நகல்: மாவட்ட வன அலுவலர், கரூர்

இளநிலை உதவியாளரின் பணிப்பதிவேடு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. மேற்படி ஆணையினை இளநிலை உதவியாளருக்கு சார்பு செய்து, அதன் இரண்டாம் பிரதியில் ஒப்புகையினை பெற்று பணிப்பதிவேட்டில் சேர்த்து அறிக்கை செய்யவும், இளநிலை உதவியளாரது பணியினை வரன்முறைப்படுத்திய விவரத்தினை அன்னாரது பணிப்பதிவேட்டில் பதிவு செய்து அதன் பக்க எண்களைத் தெரிவிக்கவும் மாவட்ட வன அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும், பணிப்பதிவேடு கிடைக்கப் பெற்றமைக்கான ஒப்புகையினையும், உடன் அனுப்பி வைக்குமாறு மாவட்ட வ்ன அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

நகல்: பணிப்பதிவேட்டிற்கு
நகல்: செயல்முறை ஆணை இருப்புக்கோப்பிற்கு.

டே.கு.எண். 2109/2019/பி2

மாவட்ட வன அலுவலர்,
கரூர் வனக்கோட்டம்,
கரூர்.
நாள் · 25.01.2023

அனுப்பலாகிறது.

மாவட்ட வன அலுவலர்
கரூர் வனக்கோட்டம்.
கரூர்.

25/1/23

பெறுநர்
திருமதி. ப. மதிப்ரியா,
இளநிலை உதவியாளர்.

ஐயா,

நகல் பெற்றுக்கொண்டேன்.

25/1/23